**கவனிக்க.-** *04.04.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1858 - 2014 අප්‍රේල් මස 11 වැනි සිකුරාදා - 2014.04.11

*1858 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *474* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *499* |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III (தொழில்நுட்பம் சார்-வகுதி 3) சேவைத் தரத்திலான செய்து காட்டுனர் பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் செய்து காட்டுனர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| | துறை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மர வேலை நிபுணத்துவம் | 15 |
| 2 | உலோக வேலை நிபுணத்துவம் | 18 |
| 3 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | 14 |
| 4 | மின்னியல் நிபுணத்துவம் | 13 |
| 5 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | 15 |

1. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்றவேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக்கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட விடயப் பரப்பின்கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றுக்கும் பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றுக்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

2. **தேவையான தகைமைகள்**.- (i) கல்வித் தகைமை.- கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

(ii) தொழில் தகைமை.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் மர வேலைத் தேர்ச்சி/ உலோக வேலைத் தேர்ச்சி/மோட்டார் இயந்திர தேர்ச்சி/மின்னியல் நிபுணத்துவம்/கட்டட நிர்மாணத் தேர்ச்சி தொடர்பாக ஒரு வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) சேவை அனுபவம்.- அரசாங்க அல்லது அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றில் பதவிக்கு உரித்தான துறையில் (01) ஒரு வருட காலத்திற்குக் குறையாது சேவையாற்றிய அனுபவம் இருத்தல்.

(iv) உடல் தகைமை.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) வேறு தகைமைகள் :

* இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த குணவியல்புகளை உடையவர்களாக இருத்தல் ;
* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**.- (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவைகள்/அநாதைகள்/தபுதாரர், ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனமானது 3 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டது. செய்து காட்டுனர் III பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் இணைந்து ஐந்து (05) வருட காலத்தினுள், சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமான ஏனைய அரச கரும மொழியில் குறித்த மட்டத் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதோடு, அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் நன்னடத்தைக் காலத்தினுள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

4. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இந்தப் பதவிக்கு ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 06 x 240 - 14 x 320 - ரூபா 23,665 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். (2006.04.25 ஆந் திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு அமைய சம்பளக் குறியீட்டு இலக்கம் MT-1-2006 (A)).

6. **எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு**.-

| | வினாத் தாளின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு மற்றும் நுண் ணறிவைப் பரீட்சித்தல் | சமகால, சமூக நிகழ்வுகள் தொடர்பான அறிவு, சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் புத்தாக்கச் சிந்தனைத் திறன், பகுப்பாய்வு செய்வதற் கான திறமை என்ப வற்றைப் பரீட்சிப்ப தற்கான சுருக்க வினாப் பத்திரம் | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| 2 | மர வேலை நிபுணத்துவம் | மர வேலை (கோட்பாடு), மர வேலை பொறிமுறைத் தேர்ச்சி, தொழில்நுட்ப வரைவு, தொடர்பாடல் ஆற்றல், கணிதம், பொருத்து வேலை, தளபாட பொருட்கள் உற்பத்தி | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 3 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொடர்பாடல் திறன், தொழில்நுட்ப வரைவு, ஒட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 2 மணித்தியாலம் | 100% | 40% |

| | வினாத் தாளின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 4 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | பொறியியல் வரைவு மற்றும் ஆக்கத் திறன், உற்பத்தித் தொழில்நுட்பவியல், இயந்திரப் பராமரிப்பு மற்றும் சக்தி முகாமைத் துவம், தன்னியக்க தொழில் நுட்பவியல், பெற்றோல்/ டீசல் இயந்திரம், மோட்டார் வாகன மின் தொழில்நுட்பம் | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 5 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, மைக்ரோ செயலாக்கஞ் சார்ந்தவை, பிரயோக மின் னியல் அளவீடு, கம்பிகளின் அமைப்பு | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 6 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமாண அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல், கட்டமைக்கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவை, அளவையியல் | 2 மணித்தியாலம் | 100% | 40% |

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளித்தொகை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில் தகைமைகள் | 35 |
| மேலதிக அனுபவம் | 30 |
| மொழித் தேர்ச்சி | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

8. **விண்ணப்பதாரியின் ஆளடையாளங்கள்**.- சகல வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்திசெய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்ப கல்வி பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2014.05.12 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "செய்து காட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திற்குரிய பகுதியில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(v) பரீட்சை அனுமதி அட்டையை விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பும் பொருட்டு, விண்ணப்பதாரியின் சுய முகவரியிடப்பட்டு ரூபா 30 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 23 செ.மீ. x 10 செ.மீ. அளவான கடித உறையொன்றும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமான ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு, முப்படை அதிகாரி ஒருவர் அல்லது 22,935 ரூபாவை திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(viii) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாக கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.

10. **பரீட்சை ஒழுங்குவிதிகள்**.- (i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு,

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது, சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழி மூலத்தில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளுக்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி குறித்த தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

11. போலியான தகவல்கள் வழங்கல்.- அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

எஸ். பாலசுப்பிரமணியம்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. : 557,
கொழும்பு 10,
2014, ஏப்பிறல் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III (தொழில்நுட்பம்சார் வகுதி - 3) சேவைத் தரத்திலான செய்து காட்டுனர் தரம் (III) பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்பு செய்தல்**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் துறை | |
| விண்ணப்பிக்கும் மொழி மூலம் | |

1. விண்ணப்பதாரரின் பெயர் :-

   (i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :-

   (i) அலுவலக முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.

   (ii) தனிப்பட்ட முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் :----.
   செல்லிட தொலைபேசி இலக்கம் :----.
   (முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :-

   ஆண்டு :---- மாதம் :---- திகதி :----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

   வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :----.
   (திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | தரம் | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள் :
டிப்ளோமா :----.
சான்றிதழ் பாடநெறி :----.

12. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி :----.
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி :----.

13. நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா அல்லது பதிவு செய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.

(பதிவு செய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

தேசிய இனம் : (கூட்டினுள் சரியான இலக்கத்தை இடவும்)
சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இலங்கை முஸ்லிம்-3, இந்தியா வம்சாவளி-4, ஏனையோர்-5

14. நீர் அரசாங்க பதவி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

15. தற்போது அரசாங்க சேவையில் உள்ளீர் எனில் உமக்கு எதிராக திணைக்களம் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா ? :----.

16. நீர் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும் :----.

17. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.
பணம் செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

18. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ........................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

**(இந்தப் பகுதி அரசாங்கத் தொழிலில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)**

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ................................................... ....................................................... அவர்கள் .................................................................... எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

4-243/1

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சார் வகுதி 3) வகுப்பு III சேவைத் தரத்தில் செய்து காட்டுனர் பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் செய்து காட்டுனர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்ப தேர்ச்சி பெற்ற சேவைத் தொகைக்கு (PL-3-2006(A)) ஏற்புடைய பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| | துறை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மர வேலை நிபுணத்துவம் | 04 |
| 2 | உலோக வேலை நிபுணத்துவம் | 04 |
| 3 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | 03 |
| 4 | மின்னியல் நிபுணத்துவம் | 03 |
| 5 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | 04 |

1. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்றவேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக் கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட விடயப் பரப்பின்கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றுக்கும் பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றுக்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

2. **தேவையான தகைமைகள்**.- (i) *கல்வித் தகைமை*.- கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் எல்லாமாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

(ii) *தொழில் தகைமை*.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 4 ஆம் மட்டத்தின் பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

மரவேலைத் தேர்ச்சி/உலோக வேலைத் தேர்ச்சி/மோட்டார் இயந்திர தேர்ச்சி/மின்னியல் நிபுணத்துவம்/கட்டட நிர்மாணத் தேர்ச்சி தொடர்பாக ஒரு வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி ஒன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) *சேவை அனுபவம்*.- தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்ப சேவைத் தொகைக்கு (PL-3-2006(A)) உரித்தான பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்று 7 ஒரு வருட கால செயற்பாடு நிலையிலான திருப்திகரமான சேவைக் காலத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) *உடல் தகைமை*.- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) *வேறு*.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**.- (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது. விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது 1 வருட செயற்படும் காலத்திற்கு உட்பட்டது. செய்து காட்டுனர் III பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் இணைந்து ஐந்து (05) வருட காலத்தினுள், சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமான ஏனைய அரச கரும மொழியில் குறித்த மட்டத் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள

வேண்டியதோடு, அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் நன்னடத்தைக் காலத்தினுள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

4. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 25 வயதுக்குக் குறையாமல் இருப்பதோடு, உச்ச வயதெல்லை கிடையாது.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- இந்தப் பதவிக்கு ரூபா 14,425 - 10 x 145 - 11 x 170 - 06 x 240 - 14 x 320 - 23,665 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். (2006.04.25 ஆந் திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு அமைய சம்பளக் குறியீட்டு இலக்கம் MT-1-2006 (A)).

6. **எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு**.-

| | வினாத் தாளின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு மற்றும் நுண் ணறிவுப் பரீட் சித்தல் | சமகால, சமூக நிகழ்வுகள் தொடர்பான அறிவு, சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் புத்தாக்கச் சிந்தனைத் திறன், பகுப்பாய்வு செய்வதற் கான திறமை என்ப வற்றைப் பரீட்சிப்ப தற்கான சுருக்க வினாப் பத்திரம் | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| 2 | மர வேலை நிபுணத்துவம் | மர வேலை (கோட்பாடு), மர வேலை பொறிமுறைத் தேர்ச்சி, தொழில்நுட்ப வரைவு, தொடர்பாடல் ஆற்றல், கணிதம், பொருத்து வேலை, தளபாட பொருட்கள் உற்பத்தி | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 3 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொடர்பாடல் திறன், தொழில்நுட்ப வரைவு, ஒட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 4 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | பொறியியல் வரைவு மற்றும் ஆக்கத் திறன், உற்பத்தித் தொழில்நுட்பவியல், இயந்திரப் பராமரிப்பு மற்றும் சக்தி முகாமைத் துவம், தன்னியக்க தொழில் நுட்பவியல், பெற்றோல்/ டீசல் இயந்திரம், மோட்டார் வாகன மின் தொழில்நுட்பம் | 2 மணித்தியாலம் | 100% | 40% |

| | வினாத் தாளின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதிகூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 5 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, மைக்ரோ செயலாக்கஞ் சார்ந்தவை, பிரயோக மின் னியல் அளவீடு, கம்பிகளின் அமைப்பு | 2 மணித்தியாலம் | 100% | 40% |
| 6 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமாண அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல், கட்டமைக்கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவை அளவையியல் | 2 மணித்தியாலம் | 100% | 40% |

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளித்தொகை |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில் தகைமைகள் | 35 |
| மேலதிக அனுபவம் | 30 |
| மொழித் தேர்ச்சி | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

8. **விண்ணப்பதாரியின் ஆளடையாளங்கள்**.- சகல வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்திசெய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்ப கல்வி பயிற்சித் திணைக்களம், த.பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2014.05.12 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "செய்து காட்டுனர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலத்திற்கு, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்திற்குரிய பகுதியில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(v) பரீட்சை அனுமதி அட்டையை அபேட்சகர்களுக்கு அனுப்பும் பொருட்டு, விண்ணப்பதாரியின் முகவரி குறிப்பிடப்பட்டு விண்ணப்பதாரியின் பெயர் குறிப்பிடப்பட்டு 30 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 23 செ. மீ. x 10 செ. மீ. அளவான கடித உறையொன்றும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவங்கள் தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(vii) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணபபங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாக கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.

10. **பரீட்சை ஒழுங்குவிதிகள்**.- (i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு,

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பனவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது, சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழி மூலத்தில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளுக்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி குறித்த தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

11. போலியான தகவல்கள் வழங்கல்.- அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

எஸ். பாலசுப்பிரமணியம்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2014, ஏப்பிறல் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார் வகுதி - 3) வகுப்பு III சேவைத் தரத்திலான செய்து காட்டுனர் (III) பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல்**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் துறை | |
| விண்ணப்பிக்கும் மொழி மூலம் | |

1. விண்ணப்பதாரரின் பெயர் :-

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :-

(i) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) தனிப்பட்ட முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
செல்லிட தொலைபேசி இலக்கம் :----.
(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :-

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :----.
(திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)

8. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :
வருடம் ----                                   பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/டிப்ளோமா | வருடம் | தோற்றிய பாடங்கள் | தரம் | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள் :
டிப்ளோமா :----.
சான்றிதழ் பாடநெறி :----.

12. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி :----.
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி :----.

13. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.
பணம் செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

இந்த விண்ணபப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தில் ....................................... தொழில்நுட்ப/தொழில்நுட்பவியல் கல்லூரியில்/பிரதான அலுவலகத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ................................................. அவர்கள், ................................................................... எனும் பதவியில் தற்போது பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அந்தப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

*3-243/2*

---

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (சாதாரணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர்'' (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப் படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப் பிக்கும் பதவிப் பெயரினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2014.06.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160- 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கொடுப்பனவுகள் ரூபா 2,000 ;
(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :
(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.

(அ) இலவச பயண வசதி ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் பெற முடியும்) ;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;
(ஈ) தமது விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ளவதற்கான வசதிகள் ;
(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்** :

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ.த.(சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாத வராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க.பொ.த.(சா.தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்க ளாக கருதப்பட மாட்டாது.

(இ) உடற் தகைமைகள் :

உயரம் : 5 அடி 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உடல் தகைமைகள் சற்று குறைவாக இருப்பின், அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவைப்பாடு :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமான வர்களாகக் கருதப்படுவர்).

**5. ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அல்லது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 05 நிமிடங்கள் 14 விநாடிகள்.

உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை பற்றிய வினாத்தாள் எழுதுதல் ;
* பொது அறிவும் நுண்ணறிவும் (01 மணித்தியாலம்.)

**6. மருத்துவப் பரீட்சை.-** விண்ணப்பதாரி தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும், அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**8. அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு, 2007.07.01 ஆந் திகதிக்குப் பின் மாகாண/ அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும், சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் பிற்போடப்படும்.

**9. நியமனக் கொள்கைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

**10. சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் மூன்று ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி, ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்கள்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அனுமதி இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் 2006.10.19 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருப இலக்கம் 1952/2006 மற்றும் 2007.08.09 (திருத்தப்பட்டது) பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களை தெரிவித்து திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை 1693/2003 இன் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியுரை/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஏ) பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய வேறு விசேட செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ் ;
(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்);
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி 11 x 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

என். கே. இலங்ககோன்,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (சாதாரணம்)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :----.
(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----,
கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின்தந்தை வழிப்பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

ஆண்டு :-----, மாதம் :-----, நாள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? : -----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் மற்றும் முகவரிகளைக் குறிப்பிடுக :-----.

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? :-----.

16. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர்களா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் என்பவற்றைத் தருக. நியமனக் கடிதத்தின் பிரதியொன்றையும் இணைக்கவும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? : -----.(அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்).

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் : -----.

18. (அ) நீங்கள் ஆயுத படைதாங்கு தொண்டர் அணி சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுத படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

4-283

---

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி (சாதாரணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர்" (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2014.06.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,90,200 - 7 x 2,160 - 2 x 2,880- 8 x 3,840 - 17 x 4,500 - ரூபா 3,18,300.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கொடுப்பனவுகள் ரூபா 2,000 ;
(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 12,000 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 9,600.

(இ) வேறு கொடுப்பனவுகள் :

(1) சீருடைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;
(2) சீருடைக் கொடுப்பனவு ரூபா 200.

(அ) இலவச பயண வசதி ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் பெற முடியும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) தமது விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ளவதற்கான வசதிகள் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) *வயதெல்லை.-* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள்.-* க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்,

விண்ணப்பதாரி க. பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவ ராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்க ளாக கருதப்பட மாட்டாது.

(இ) *உடற் தகைமைகள் :*

*உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)*

**குறிப்பு 1**.- *சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உடல் தகைமைகள் சற்று குறைவாக இருப்பின், அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின்படி தகைமை பெறுவர்.*

(ஈ) *பார்வை தொடர்பான தேவைப்பாடு :*

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்.-* விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமான வர்களாகக் கருதப்படுவர்). ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்த, தற்போது பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்நிபந்தனை ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அல்லது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

1000 மீற்றர் - 05 நிமிடங்கள் 14 விநாடிகள்.

உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை பற்றிய வினாத்தாள் எழுதுதல் ;
* பொது அறிவும் நுண்ணறிவும் (01 மணித்தியாலம்.)

**6. மருத்துவப் பரிசோதனை**.- விண்ணப்பதாரி தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும், அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

*8.* **அரசகரும மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு, மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும், சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் பிற்போடப்படும்.

*9.* **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

*10.* **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு கால தகுதிகாண் பயிற்சி அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்கள்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அனுமதி இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் 2006.10.19 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் 1952/2006 ஆம் சுற்றுநிருப இலக்கம் மற்றும் 2007.08.09 ஆந் திகதி (திருத்தப்பட்டது) பிரகாரமும் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களை தெரிவித்து திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக் காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை 1693/2003 இன் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியுரை/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஏ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

*11.* (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

*12.* விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டவை);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய வேறு விசேட செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

*13.* (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி 11 x 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

*14.* இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

என். கே. இலங்ககோன்,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பெண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி (சாதாரணம்)*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----.
பிரதேச செயலகம் :----.
(ஏ) தொலைபேசி இலக்கம் (வசிப்பிடம்) :-----,
கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின் வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின்தந்தை வழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரது பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-----.

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? :----.

16. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர்களா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் என்பவற்றைத் தருக. நியமனக் கடிதத்தின் பிரதியொன்றையும் இணைக்கவும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? (அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்) : -----.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் : -----.

18. (அ) நீங்கள் ஆயுத படைதாங்கு தொண்டர் அணி சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுத படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

21. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்)**

இந்த விண்ணப்பதாரி ...................................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடப்படல் வேண்டும்)

பதவி :-----.
திகதி :-----.

4-284

---

## களுத்துறை மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்கு தொழில்நுட்பவியலாளர் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

களுத்துறை மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்கு தொழில்நுட்ப வியலாளர் தரம் III பதவிக்கு தகைமையுள்ளவர்கள் கோரப்படுகின்றனர். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து, 2014.04.25 ஆந் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்கவும். ஏற்கனவே அரச சேவையில் இருப்பவர்கள் தங்களின் திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. **தொழில் விவரணம்**.- களுத்துறை மாவட்டச் செயலாளர் அலுவலக கட்டிடங்களின் மின் மற்றும் தண்ணீர் வலையமைப்பை பரிபாலித்தல்.

2. **வயது**.- 18 வயதுக்குக் குறையாமல் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.)

3. **கல்வித் தகைமை**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 6 பாடங்களுக்கு குறையாத சித்தி மற்றும் 2 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

4. **தொழில் தகைமை**.- தொழில்நுட்ப கல்லூரியில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் மின்னியல் மற்றும் நீர்க்குழாய் நுட்பம் அடங்கலாக 3 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியைப் பூர்த்திசெய்த சான்றிதழ் இருக்க வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- பீஎல் 3 ரூ. 12,470 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - ரூபா x 18,860.

6. **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தர ஓய்வூதியமுடையது. இப்பதவிக்குத் தெரிவுசெய்யுமிடத்து விண்ணப்பதாரி நாட்டில் ஏதாவது ஒரு பிரதேசத்தில் சேவையாற்ற கடமைப்படுவார்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமையானவர் தெரிவுசெய்யப்படுவர்.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- தரப்பட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப்படிவத்தை தயாரித்து 2014.04.25 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக ''மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை'' என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், 'தொழில்நுட்பவியலாளர் தரம் III பதவி' எனக் குறிப்பிட வேண்டும். காலதாமதமாகக் கிடைக்கும் அல்லது அடிப்படை தகைமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவது தொடர்பாக மாவட்டச் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவோ அல்லது நிராகரிக்கப் பட்டதாகவோ அறிவிக்கப்படமாட்டாது.

யூ. டி. சீ. ஜயலால்,
களுத்துறை மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக
செயலாளர்.

மாவட்ட செயலகம்,
களுத்துறை,
2014, மாச்சு 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**களுத்துறை மாவட்டச் செயலாளர் அலுவலகம்**

தொழில்நுட்பவியலாளர் பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முழுப்பெயர் :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு | | | மாதம் | | | திகதி | | |

(ii) 2013.12.31 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் | | | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4. (i) சேவையாற்றும் திணைக்களம்/மாகாண சபை :----.

(ii) பதவி :----.

5. வதிவிட மாவட்டம் :----.

6. முகவரி : (i) அலுவலக முகவரி :----.

(ii) தனிப்பட்ட முகவரி :----.

7. கல்வித் தகைமைகள் :----.

8. தொழில் தகைமைகள் :----.

9. விவாகமானவர்/விவாகமாகாதவர் :----.

.................................................................. ஆகிய நான் மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் சரியானவை, உண்மையானவை என்றும் உறுதிமொழி கூறுகின்றேன். நான் அரச சேவையில் பதவியிறக்கம் செய்யப்படவோ அல்லது திறமையின்மையினால் அரச சேவையில் ஓய்வுபெற செய்யப்படவோ அல்லது அறிவித்தலின்றி வேலையை விட்டு விலகியவராகக் கருதப்படவோ இல்லை என்பதை தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையற்றவை என்றோ அல்லது பிழையானவை என்றோ நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னதாக வெளியாகுமிடத்து நான் தகைமையற்றவன் ஆகுவதையும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான தகவல்கள் வெளியாகுமிடத்து எந்தவிதமான நஷ்டஈடும் வழங்கப்படாமல் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையில் உள்ளவரெனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி .................................................. அவர்களின் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் ........................................ தற்காலிக/ அமைய ஊழியராக கடமையாற்றுகின்றார் என்பதையும் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் தெரிவிக்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவர்.
(பதவி முத்திரையைப் பதிக்கவும்.)

திகதி :----.

4-357

**நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் ஆரம்ப தேர்ச்சி பெற்ற பதவிக்குறிய இயங்கா நிழற் படக் கலைஞர் /செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர் மற்றும் ஆரம்பப் பகுதி தேர்ச்சி பெற்ற பதவிக்குறிய மீளாய்வுக் கலைஞர் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பு**

| | |
|---|---|
| இயங்கா நிழற் படக் கலைஞர் பதவிகள் | 01 |
| செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர் பதவிகள் | 01 |
| மீளாய்வுக் கலைஞர் பதவிகள் | 01 |

இப்பதவிகளுக்கு கீழே குறிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப் படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்**.- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்குக் குறையாத அமர்வுகளில் இரண்டு சாதாரண சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2. **தொழிற்சார்த் தகைமைகள் :**

2.1 இயங்கா நிழற் படக் கலைஞர் /செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர்.- நிழற் படம் தொடர்பான தேசிய தொழிற் சார்த் தகைமையின் (N.V.Q) நான்காவது (04) மட்டத்துக்குக் குறையாத மட்டத்துக்குறிய பாட நெறியொன்றைக் கற்று சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

2.2 மீளாய்வுக் கலைஞர்.- நிழற் படம் தொடர்பான தேசிய தொழிற் சார்த் தகைமையின் (N.V.Q) இரண்டாவது (02) மட்டத்துக்குக் குறையாத மட்டத்துக்குறிய பாட நெறி யொன்றைக் கற்று சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

3 **அனுபவம்**.- குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

4. **உடல் ரீதியான தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குறிய கடமைகளைப் புரிவதற்கும் ஏற்ற உடல் மற்றும் உள ரீதியிலான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

5. **ஏனைய தகைமைகள் :**

5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

5.3 பதவிக்கு இணைத்துக் கொள்வதற்குத் தேவையான மேலே குறிக்கப்பட்டுள்ள (1 இலிருந்து 4 வரை) அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப் பப்படிவத்துடன் குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் குறித்த சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

*6*. **வயதெல்லை**.- விண்ணப்பதாரி, விண்ணப்பப் படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு *18* வயதுக்குக் குறையாதவராகவும் *45* வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*7*. **சம்பள அளவுத் திட்டம்** :

*7.1* *இயங்கா நிழற் படக் கலைஞர் /செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர்*.- மாதாந்தம் ரூபா *12,470 – 10* x *130 – 10* x *145 – 10* x *160 – 12* x *170* – ரூபா *18,860* (PL – *3* – *2006* A)

*7.2* *மீளாய்வுக் கலைஞர்*.- மாதாந்தம் ரூபா *12,210 – 10* x *130 – 10* x *145 – 10* x *160 – 12* x *170* – ரூபா *18,600* (PL – *2* – *2006* A)

*8*. **இணைத்துக்கொள்ளப்படும் முறை**.- கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையொன்றினாலும், செய்முறைப் பரீட்சையொன்றினாலும் இணைத்துக் கொள்ளப்படும்.

*9*. **பணியில் ஈடுபடுத்தும் நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்துக்கு உரித்துடையது. விதவைகள் மற்றும் அநாதைகள் /தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

*10*. **விண்ணப்பப்படிவங்களை முன்வைத்தல்** :

*10.1* இவ் அறிவிப்பில் கீழே குறிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சரியாகப் பூரணப்படுத்தி *2014.05.11* ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் கீழே குறிக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடப் பக்க மேல் மூலையில் "நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் - இயங்கா நிழற் படக் கலைஞர் / செவிப்புல கட்புலக் கலைஞர் /மீளாய்வுக் கலைஞர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தற்சமயம் அரச சேவையிலுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப் படிவங்களைத் தமது திணைக்கள /நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு,
இலக்கம் 500, ரீ. பீ. ஜாயா மாவத்தை,
கொழும்பு *10*.

*10.2* விண்ணப்பப் படிவம் சரியாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். இவ் அறிவிப்பிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

*10.3* கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவத்தில் குறிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு தகவல் பொய்யானது அல்லது பிழையானதென ஆட் சேர்ப்புக்கு முன் கண்டறியப்பட்டால் அவ் விண்ணப்பப் படிவம் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி முன்வைத்துள்ள ஏதாவதொரு தகவல் பொய்யானது அல்லது பிழையானதென பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பின் கண்டறியப்பட்டால் அதற்கேற்ற நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாகச் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*11*. **தொழில்சார்ப் பரீட்சைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

*11.1 இயங்கா நிழற் படக் கலைஞர்/செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர் :*

| *பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *அதியுயர் புள்ளிகள்* | *சித்திக்குரிய புள்ளிகள்* |
|---|---|---|
| (அ) இயங்கா நிழற் படக் கலைஞர் பதவி : | | |
| * புகைப்படப் பிடிப்பாளர் | *60* | |
| * ஒளி வழங்குதல் மற்றும் நவீன தொழில் நுட்ப முறைகளின் பயன்பாடு | *20* | பொருத்தமற்றது |
| * தெளிவான நிழற் படங்கள் எடுத்தல் | *20* | |
| மொத்தம் | *100* | - |
| (ஆ) செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர் பதவி : | | |
| *1*. வீடியோ ஒளிப் பதிவுக் கருவி மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை இயங்க வைத்தல். | *30* | |
| *2*. செய்திகளுக் கேற்ற முறையில் காட்சிகளைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் தரவுகளை ஒன்று திரட்டுதல். | *20* | பொருத்தமற்றது |
| *3*. தொலைக் காட்சிக் காட்சிகளுடன் தொடர்புடைய இயற்கை ஒளியைப் பயன்படுத்துதல் மற்றும் ஒளிப் பதிவுக்குத் தேவையான மின் ஒளியை வழங்குதல். | *20* | |

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | அதியுயர் புள்ளிகள் | சித்திக்குரிய புள்ளிகள் |
|---|---|---|
| 4. கணினித் தொழில் நுட்பம் தொடர்பான செய்திகளை மீளமைக்கும் திறன் | 10 | |
| 5. ஒளி நாடாக்களைப் பதிவு செய்யும் தொழில் நுட்பமும், அதனுடன் தொடர்புடைய உபகரணங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான அறிவும் | 10 | பொருத்த மற்றது |
| 6. தொலைக் காட்சிக் கூடங்களில் காட்சிப் படுத்துதல் தொடர்பான சாதாரண அறிவு | 10 | |
| மொத்தம் | 100 | - |

11.2 மீளாய்வுக் கலைஞர் :

| பாடம் | அதியுயர் புள்ளிகள் | சித்திக்குரிய புள்ளிகள் |
|---|---|---|
| மீளாய்வுக் கலைஞர் பதவிக்குரிய தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மீளமைத்தல் மற்றும் உபகரணங்களின் பயன்பாடு | 100 | 40% |

12. கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படும் முறை:

12.1 இயங்கா நிழற் படக் கலைஞர் /செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர் :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதியுயர் புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்குக் கருத்லெடுக்கப் படும் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 35 | பொருத்த மற்றது |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 15 | |
| 3. அனுபவம் | 20 | |
| 4. கணினி அறிவு | 10 | |
| 5. மொழித் தேர்ச்சி | 15 | |
| 6. நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறன் | 05 | |
| மொத்தம் | 100 | - |

12.2 மீளாய்வுக் கலைஞர் :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதியுயர் புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்குக் கருத்திலெடுக்கப் படும் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 35 | |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 15 | |
| 3. அனுபவம் | 20 | பொருத்த மற்றது |
| 4. ஆங்கில மொழித் திறன் | 15 | |
| 5. கணினி அறிவு | 10 | |
| 6. நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

குறிப்பு.- (i) மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்கும் பிரதான துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதியுயர் புள்ளிகளினுள் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு விபரமான புள்ளி வழங்கல் திட்டமொன்றை அனுமதித்தல் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

(ii) கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையினாலும், தொழிற் சார்ப் பரீட்சையினாலும் பெறுகின்ற மொத்த புள்ளிகளின் வரிசைக் கிரமத்துக்கு அமையவும், காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களின் அடிப்படையிலும் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

13. இங்கு குறிக்கப்படாத ஏதாவதொரு விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரி நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஆவார்.

(பொறியியலாளர்) கே. டப்ளியூ. ஐவன் டீ சில்வா,
செயலாளர்.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு,
கொழும்பு 10,
2014, ஏப்பிறல் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு**

*இயங்கா நிழற் படக் கலைஞர் /செவிப்புல கட்புல தொழில் நுட்பக் கலைஞர் /மீளாய்வுக் கலைஞர் பதவி*

இலக்கம் :--------------------------
(அலுவலகப் பாவனையின் பொருட்டு)

1. (அ) முதலெழுத்துடன் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.
(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4. தொலைபேசி இலக்கம் :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. ஆணா /பெண்ணா என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு :------------------- மாதம் :-------------------
திகதி :-------------------

8. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா /விவாகமாகாதவரா என்பது :----.

11. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை
ஆண்டு :----.
பரீட்சைச் சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

12. தொழில் தகைமைகள் :

| நிறுவனம் | பதவி | இருந்து - வரை |
|---|---|---|
| | | |

13. அனுபவம் : -------------------
(விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவிப்பிலுள்ளவாறு)

விண்ணப்பதாரியின் உறுதியுரை

................................. ஆகிய நான், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். நான் அரச பணியிலிருந்து விலக்கப்பட்டு அல்லது மனிதாபிமான மாற்று வழியாக வினைத் திறனின்மை காரணமாகப் பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்படவில்லை எனவும், பதவியைக் கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை என நான் தெரிவு செய்யப் படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றோனாக ஆக்கப் படுவேன் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய நிலை நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்ட ஈடுமின்றி பணியிலிருந்து விலக்கப்படலாமெனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி .................... தற்போது இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் .......................................... ஆக நிரந்தர/தற்காலிக/ அமய அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் என்றும் இப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : -----------------
பதவி : ---------------
அமைச்சு/திணைக்களம் : ------------
திகதி : -----------

4-374

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

*பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014*

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் முகாமை உதவியாளர் தொழில்நுட்ப முறைசாரா தொகுதி 2 சேவைப் பிரிவின் பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கொழும்பில் மட்டும் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள், பரீட்சைத் தரவுகள் உதவியாளர் வகுப்பு III இன் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தெரிவு செய்யப்படுவர்.

2. **சம்பளம்**.- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சைத் தரவுகள் உதவியாளர் பதவியின் தரங்கள் III, II மற்றும் I ஆகியவற்றுக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத்திட்டம்.

ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 -10 x 320 - 22,040 ஆகும். ரூபா 14,740 ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரம் உயர்வும், ரூபா 16,680 ஐ கடந்து செல்வதற்காக தரம் I இற்கான தரம் உயர்வும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். இது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட பதவியாகும். எவ்வாறாயினும் திணைக்களத்தினுள்ளாக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படலாம். இப்பதவியின் தரம் III இற்கு நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்கள்.

4. **தகைமைகள்**.- பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) கீழ்க்குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) ஒரு அமர்வில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் உட்பட மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

(ii) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சையில் சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த ஒரு பாடத்திலேனும் சித்தி யடைந்திருத்தல்.

(உ) *தொழிற்தகைமைகள்*.- (i) ஆகக்குறைந்தது கணினி/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைகளுக்குரிய தேசிய தொழில் தகைமை (NVQ) 3 ஆம் மட்டம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அதற்கீடானதென ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு தகைமை களைப் பெற்றிருத்தல் ;

(ஊ) *அனுபவம்*.- கணினி தரவு பதிவு தொடர்பிலான ஆகக்குறைந்தது ஆறு மாத (6) அனுபவம் ;

(எ) *உடற்தகைமைகள்*.- (i) பதவிக்குரிய கடமைப் பொறுப்புக் களில் ஈடுபடுவதற்கு ஏற்ற போதிய உடல் மற்றும் மனோ நிலையில் இருப்பதுடன், சேவையின் நிமித்தம் இரவு, பகல் சேவையாற்றுவதற்கான தகுதிகளைப் பெற்றிருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

* அனைத்து பரீட்சார்த்திகளும் இப்பதவிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் 2014.05.09 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் பூர்த்திசெய்திருத்தல் முக்கியமாகும்.

5. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சை எழுத்துமூலப் பரீட்சையொன்றையும், கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றையும் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் ஊடக மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது :-

5.1 *எழுத்துப் பரீட்சை :*

| பாடம் | ஆகக்கூடுதலான புள்ளிகள் | நேரம் மணித்தியாலம் | சித்தி புள்ளிகள் |
|---|---|---|---|
| கணினி எழுத்தறிவு | 100 | 02 | 40 |

*கணினி எழுத்தறிவு*.- இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியினது கணினி/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) 3 ஆம் மட்டத்திலான பாடப் பரப்பிற்குரிய அறிவைப் பரீட்சிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.

5.2 *கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :*

| பாடம் | ஆகக்கூடுதலான புள்ளிகள் |
|---|---|
| கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை | 100 |

*கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை*.- *குறித்த எழுத்துப் பரீட்சையில் காட்டியுள்ள திறமை ஒழுங்கு வரிசை அடிப்படையில், நிலவும் வெற்றிடங்கள் எண்ணிக்கையின் இரு மடங்கு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். இக்கட்ட மைப்பு நேர்முகப் பரீட்சை இரண்டு கட்டங்களைக் கொண்ட தாக அமையும்.

(அ) முதலாம் கட்டம் :

| புள்ளிகள் வழங்குவதற் குரிய பிரதான தலைப்பு | வழங்கப்படும் ஆகக் கூடுதலான புள்ளிகள் |
|---|---|
| (i) மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| (ii) மேலதிக தொழிற் றகைமைகள் | 35 |
| (iii) நேர்முகப் பரீட்சை யில் காட்டிய திறமைகளுக்காக | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 70 |

* மேலுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்குவதற்குரிய பிரதான தலைப்பு களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் ஆகக்கூடுதலான புள்ளிகள் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின்போது வழங்கப்படுவதற்கேற்ற விபரப் புள்ளி வழங்கல் திட்டங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

(ஆ) இரண்டாம் கட்டம்.- கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகளின் கணினி மூலமான தட்டச்சு திறமையை பரிசீலிப்பதற்கான செய்முறைப் பரீட்சை நடாத்தப்படும். அதற்கு கீழ் குறித்தவாறு புள்ளிகள் வழங்கப்படும் :

| பரீட்சைக்கான மூலப் பிரமாணம் | வழங்கப்படும் ஆகக் கூடுதலான புள்ளிகள் |
|---|---|
| (i) கொடுக்கப்படும் ஆவணத்தை கணினியூடாகப் பதிவுசெய்து தரப் பட்ட மாதிரிக் கேற்ப தயாரித்தல் | 10 |
| (ii) கணினி பதிவு செய்து அச்சுப் பிரதியைப் பெற செலவளிக்கும் மிகக்குறைந்த காலம் | 10 |
| (iii) திருத்தமான எழுத் துக் கோப்புக்கு | 10 |
| மொத்தப் புள்ளிகள் | 30 |

* எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்குரிய மேலுள்ள இரு கட்டங்களிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்த புள்ளிகளின் அடிப்படையிலான திறமை ஒழுங்கு வரிசையில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்புடையதாக விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

5.3 இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பினும், பரீட்சார்த்திகள் நியமனத்திற்கான தகைமை பெறுவதற்காக எழுத்துப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% ஆவது பெற்றிருத்தல் வேண்டும்.

6. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப்பத் திரங்களைப் பூர்த்திசெய்யும்போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன்கீழ் 2014.05.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன் எந்தவொரு அஞ்சலகத்திலும் அல்லது உப அஞ்சலகத்தில் மாத்திரம் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பங்கள் ஏ4 (21 X 29 செ. மீ.) (சாதாரண அரைத் தாள்) அளவிலான தாளை உபயோகித்து-

(அ) 1 முதல் 3 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,
(ஆ) 4 முதல் 7 வரையிலான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், 8 முதல் ஏனைய பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும்.
(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார்செய்துகொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிக்கப்படல் வேண்டும்.

உரிய மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப அமையாத விண்ணப் பங்களும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத் தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்ப தாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப் படலாம்.

8.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப் பங்களைச் சமர்ப்பித்துள்ளார்கள் என்ற எடு

கோளுடன் உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை, பரீட்சார்த்தி இப்பதவிக் குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்றாக கருதப்பட லாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டபின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர் கொண்டி ருக்கவில்லை எனில் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

8.2 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014'' எனக் குறிப்பிட வேண்டும்.

8.3 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், ரூபா 2,40,360 அல்லது அதற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தைப் பெறும் அரசின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுபடுத்த வேண்டும்.

8.4 முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2014.05.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

9. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- விண்ணப்பதாரிகளுக்குரிய அனுமதி அட்டைகள் தபால் மூலம் விநியோகிக்கப்பட்டதன் பின்னர், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய பத்திரிகை அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அப்பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்தும் தமக்குரிய அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அவ்வறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், தங்களது முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை குறிப்பிடுவதுடன், தாங்கள் கொழும்பைத் தவிர்ந்த வேறு பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரியாயின் தங்களது மேற்குறித்த விபரங்களைக் குறித்து எழுதப்பட்ட கடிதத்தை (fax) தொலைநகல் ஊடாக அனுப்புவதும், அக்கடிதத்தில் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை தங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக தங்களது (fax) தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அனுப்புதல் பொருத்தமானது. பின்னர் அதுபற்றி விசாரித்தறியவும், மேலும் தங்களது விபரங்களை உறுதிப்படுத்தப்படுவதற்காக தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் பதிவுத்தபால் செய்யப்பட்ட பதிவுப் பற்றுச்சீட்டு இவற்றை தயார்படுத்தி வைத்திருத்தல் பிரயோசனப்படும்.

10. பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).

11. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுதல் அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளுதல் என கருதுதல் ஆகாது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

12. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுபற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். பரீட்சார்த்திகள் யாவரும் இவ்வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களின்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாச்சு 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

*பரீட்சை தரவுகள் உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014*
*Open Competitive Examination for Recruitment to the Post of grade III Examination Data Assistant - 2014*
(கொடுக்கப்பட்டுள்ள கூடுகளினுள் சரியான குறியீட்டையும்/ இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம் : PERERA, A. B.C :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இல. :

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் :
பெண் - 1/ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி

3.3 2014.05.09 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.4 தொலைபேசி இலக்கம் :

4. 4.1 கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

5. தொழிற் தகைமைகள் :

| பாடநெறி | பயின்ற வருடம் | தொழில்நுட்ப நிறுவனம் | NVQ மட்டம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6. வேறு கல்வி/தொழில் தகைமைகள் இருப்பின் குறிப்பிடுக :----.

7. நீங்கள் எப்பொழுதாவது யாதாயினுமொரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.
(உரிய கூட்டினுள் " ✓ " அடையாளமிடவும்)

ஆம் இல்லை

ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுக :----.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய பணம் :----.

பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.

9. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப் படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக உட்படுத்தப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்ட ஏதேனுமொரு தகவல் பொய்யானது என நியமனத்திற்கு முன்னர் தெரியவந்தால் தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ......................................... ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

4-307

---

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014)

## First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2012(2014)

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறை ஏற்பாடுகளின் பிரகாரம் முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2014, யூலை மாதத்தில் நடத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் தனியாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

(iii) அரச சேவை ஆணைக்குழுவின்கீழ் நியமிக்கப்பட்ட இயைபுடைய உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **பரீட்சைக் கட்டணம்.-** இவ்வினைத்திறமை தடைகாண் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னர் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 200 உம், மொத்தப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 600 பரீட்சைக் கட்டணமாகவும் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு மாவட்ட செயலகத்திலோ பிரதேச செயலகத்திலோ பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

4. **விண்ணப்பப்படிவம்.-** விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப் படிவம் ஏ4 தாளில் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 4.2 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்கள தலைவரின் ஊடாக, 2014, மே 12 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, “பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை” எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியும் இணைத்து அனுப்புதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.-** பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பரீட்சையின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தைச் சான்றுபடுத்தி அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினூடாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2, 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு

அறிவித்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் இணைத்து அத்துடன் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் விண்ணப்பக் கடிதத்தை நீங்கள் இலங்கை பரீட்சைகள் திணைக் களத்துக்கு அறிவித்தல் மிகவும் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு விண்ணப்பத்திலிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன் விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் மேல் அது தொடர்பில் மேற்கொள் ளப்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடன் உத்தியோகத்தர் களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**.- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | காலம் | புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அடிப்படை புள்ளிவிபர முறைகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| 3. நிதி ஒழுங்கு விதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| I அடிப்படை புள்ளி விபர முறைகள் | தரவு சேகரித்தல், சமர்ப்பித்தல், t பரம்பல், சாதாரண பரம்பல், t கருதுகோட் கோட்பாடுகளும் $X^2$ பரீசீலிப்பும், மீடிறன் வளைவுகள், மத்திய ஈர்ப்பு (இடை, இடையம், ஆகாரம்), விலகல், எழுமாற்று வலு எழுமாறில்லா வலு, சுட்டெண், இணைவுக் குணகம், பிற் செலவு, அடிப்படைப் புள்ளிவிபர அறிவு |
| II அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக்கோவை யின் II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX ஆகிய அதிகாரங்களையும் அவ்வதி காரங்களின் திருத்தஞ்செய்யப்பட்ட சுற்றறிக்கைகளிலும் கவனம் செலுத்த வும். |
| III நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்கு விதிகளின்கீழ் குறிப்பி டப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :-<br>* *I* ஆம் அதிகாரம்.- வருமான செலவின மதிப்பீடு, திரட்டிய நிதியம், வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல் (நி. பி. 1-68 வரை)<br>* *III* ஆம் அதிகாரம்.- நிதி முகாமை யும் பொறுப்புடைமையும், பிரதம கணக்கு உத்தியோகத்தர்கள், கணக்கு உத்தியோகத்தர்கள், வருமானக் கணக்கு உத்தியோகத் தர்களின் கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகார மளித்தல், சான்றுபடுத்தல், வேலை களைக் குறித்தொதுக்குதல் (நி. பி. 124-147 வரை) |

**குறிப்பு**.- *மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.
*குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை நிறுத்துவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்பட முடியாது.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானது.

டி. சி. ஏ. குணவர்தன,
தொகைமதிப்பு புள்ளிவிபரப்
பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
இல. 109, 4, 5 ஆம் மாடி,
ரொட்டுண்டா ரவர்,
காலி வீதி,
கொழும்பு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014)**

First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2012 (2014)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை பெட்டியில் எழுதவும்)

1. 1.1 முதல் எழுத்துக்களை இறுதியில் இட்டு விண்ணப்பதாரியின் முதல் எழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதாரணம் : SUNIL, J.M.U :----.

   1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   2.2 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) : ----.
   2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
   2.4 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
   2.5 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

4. பால் :-

   4.1 ஆண்-0
   பெண்-1

(உரிய இலக்கத்தைப் பெட்டியில் இடவும்)

   4.2 தேசிய அடையாள அட்டை இல. :

   4.3 பிறந்த திகதி :

வருடம் மாதம் திகதி

5. தற்போது வகிக்கும் பதவி :
   5.1 பதவி :----.
   5.2 நியமனக் கடித இலக்கம் :----.

6. 6.1 நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? : ----.
   6.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.
   6.3 பற்றுச்சீட்டு இல. :----.
   6.4 திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)
(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ....................................... செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி ................................................ எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரி பார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

4-355/1

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014)

## Second Efficiency Bar Examination for Grade I Statistical Officers in the Department of Census and Statistics - 2012(2014)

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறை ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2014, யூலை மாதத்தில் நடத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் தனியாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

(iii) அரச சேவை ஆணைக்குழுவின்கீழ் நியமிக்கப்பட்ட இயைபுடைய உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **பரீட்சைக் கட்டணம்**.- இவ்வினைத்திறமை தடைகாண் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னர் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 200 உம், மொத்தப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 400 பரீட்சைக் கட்டணமாகவும் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு மாவட்ட செயலகத்திலோ பிரதேச செயலகத்திலோ பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

4. **விண்ணப்பப்படிவம்**.- விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளில் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 4.2 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்கள தலைவரின் ஊடாக, 2014, மே 12 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியும் இணைத்து அனுப்புதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்ப தாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பரீட்சையின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வெளியிடப் பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தைச் சான்றுபடுத்தி அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினூடாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2, 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் இணைத்து அத்துடன் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் விண்ணப்பக் கடிதத்தை நீங்கள் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் மிகவும் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு விண்ணப்பத்திலிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன் விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் மேல் அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடன் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**.- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | காலம் | புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. நிதி ஒழுங்கு விதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| I அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் XV, XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்களின் திருத்தம் செய்யப்பட்ட சுற்றறிக்கைகளிலும் கவனம் செலுத்தவும். |
| II நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்கு விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :- <br>* VI ஆம் அதிகாரம்.- அரசாங்க நிதிப் பொறுப்பு, வங்கிக் கணக்கு, அரச நிதிப் பாதுகாப்பு, வரைவேடு, அளவீட்டு அலுவலர், வங்கிக் கணக்குகள் (நி. பி. 315-396 வரை) <br>* XIII ஆம் அதிகாரம்.- வழங்கல் வேலைகள் மற்றும் சேவை வழங்கல் விலைக்குப் பெறல், களஞ்சியம் அளவெடுத்தல், களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள், ஒப்பந்தம், கேள்விப்பிரமாணக் குறிப்புகளிலிருந்து விலக்களித்தல் (நி. பி. 708-775 வரை) |

**குறிப்பு**.- *மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.

*குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை நிறுத்துவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்பட முடியாது.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானது.

டி. சி. ஏ. குணவர்தன,
தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்,
இல. 109, 4, 5 ஆம் மாடி,
ரொட்டுண்டா ரவர்,
காலி வீதி,
கொழும்பு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014)**

Second Efficiency Bar Examination for Grade I Statistical Officers in the Department of Census and Statistics - 2012(2014)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை பெட்டியில் எழுதவும்)

1. 1.1 முதல் எழுத்துக்களை இறுதியில் இட்டு விண்ணப்பதாரியின் முதல் எழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதாரணம் : SUNIL, J.M.U :----.

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.4 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.5 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

4. ஆண்/பெண் பிரிவு :-

4.1 ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைப் பெட்டியில் இடவும்)

4.2 தேசிய அடையாள அட்டை இல. :

4.3 பிறந்த திகதி :

வருடம் மாதம் திகதி

5. தற்போது வகிக்கும் பதவி :

5.1 பதவி :----.

5.2 நியமனக் கடித இலக்கம் :----.

6. 6.1 நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? :----.

6.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

6.3 பற்றுச்சீட்டு இல. :----.

6.4 திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)
(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ........................................ செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ............................................... எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .................................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரி பார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

4-355/2

---

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014)

## First Efficiency Bar Examination for Statisticians in Department of Census and Statistics - 2012(2014)

புள்ளிவிபரவியலாளர் பதவிக்குரிய உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிமுறை ஏற்பாடுகளின் பிரகாரம் வினைத்திறமை தடைகாண் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2014, யூலை மாதத்தில் நடத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகள், வர்த்தமானியில் தனியாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் ஆளாக நேரிடும்.

(iii) அரச சேவை ஆணைக்குழுவின்கீழ் நியமிக்கப்பட்ட தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரவியலாளர் மாத்திரம் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குரிய பாடங்களுக்காக ஒரே தடவையில் அல்லது வெவ்வேறாகப் பல தடவைகளில் தோற்ற முடியும். முழுப் பரீட்சைக்கு அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னர் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 1,000 பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூபா 500 உம் அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு மாவட்ட செயலகத்திலும் அல்லது பிரதேச செயலகத்திலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

4. **விண்ணப்பப்படிவம்.**- இந்த அறிவித்தலுடன் இணைக்கப் பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளில் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 5 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை தட்டச்சின் மூலம் பூரணப்படுத்த இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்ப தாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்கள தலைவரின் ஊடாக, 2014, மே 12 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியும் இணைத்து அனுப்புதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் கைவசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பரீட்சையின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வெளியிடப் பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினூடாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2, 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். இதன்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையைக் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அவ்வாறு அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்புதல் பயனுடையதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்தியின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் மேலே குறிப்பிட்ட விபரங்களை உள்ளடக்கிய உங்களின் விண்ணப்பக் கடிதத்தையும் தொலைநகல் மூலம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி தேடியறிவது மிகவும் பயனுடையதாகும்.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையினைக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளும் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தமக்குரிய பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன் அவ்வாறு தோற்றும் முதல் நாளிலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

8. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை மூலம் அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்டவராயின் உரிய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்டவராயின் அரச சேவைக்குள் உள்ளீர்க்கப்படுவதற்கான தகைமையைப் பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே தோற்ற வேண்டும் என்பதுடன் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்.**- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | பாட இல. | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| 1. நிர்வாகம் | 1 | 100 | 2 மணித்தியாலங்கள் |
| 2. அரச துறை நிதி முகாமைத்துவம் | 2 | 100 | 2 மணித்தியாலங்கள் |
| 3. ஆங்கிலம் | 3 | 100 | 2 மணித்தியாலங்கள் |
| 4. பிரயோகப் புள்ளிவிபரம் | 4 | 100 | 3 மணித்தியாலங்கள் |

நிர்வாகம்.- பாட இல. 1 :

* அலுவலக மற்றும் கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், ஒழுங்கமைப்பு முறை

* தாபன விதிக்கோவையின்கீழ் காட்டப்படும் அதிகாரங்கள் I, II, III, V, VI, VII, IX, XI, XII, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII

(மேற்படி அதிகாரங்கள், அரச சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறைக் கோவையின் 1 ஆம் பாகத்தின் ஏற்பாடுகளிற் கவனம் செலுத்தவும்.)

நிதி ஒழுங்குவிதிகள்.- பாட இல. 02 :
நிதி ஒழுங்குவிதிகள் கீழ்க்காட்டப்பட்ட அதிகாரங்கள் :

| | |
|---|---|
| I | சகல பிரிவுகளும் |
| II | சகல பிரிவுகளும் |
| III | சகல பிரிவுகளும் |
| IV | சகல பிரிவுகளும் |
| V | 1, 2, 3, 4 பிரிவுகள் |
| VI | சகல பிரிவுகளும் |
| VII | 1, 2, 3, 4 மற்றும் 6 பிரிவுகள் |

ஆங்கில பாட இல. 3 :

English Grammar :

A suitable level of proficiency on the following forms of grammar in the spoken the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple/ Complex/Compound/Compels)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

Writing Skills :

The Knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Internal modes of Communication
- Formal Correspondences skills
- Writing Descriptions/Explanations
- Summary Writing skills
- Report Writing skills
- Minutes of Meeting/Agendas/Invitations
- Comprehension

Reading Skills :

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected.

- Reading and understanding the specific and general meaning of the printed text.
- Reading and interpretation (Verbal/Written)
- Understanding the Cohesion and coherence of a passage

பிரயோகப் புள்ளிவிபரம் (பாட இல. 04).- தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் கைத்தொழில், விவசாயப் புள்ளிவிபரங்கள், தேசிய கணக்குகள், தகவற் தொழில்நுட்பம் (தரவு வகைப்படுத்தல்), மாதிரி அளவீடுகள், குடிசனத் தொகைமதிப்புக்கள், விலைச் சுட்டெண்கள், வரைபடங்கள் போன்ற பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் புள்ளிவிபர வேலைகள் சம்பந்தமாக இயைபுடைய உத்தியோகத்தர்களின் அறிவை மதிப்பிடும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும்.

10.1 சித்தி எய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் எடுத்திருத்தல் வேண்டும்.)

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதப்பட முடியாது.

11.1 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் உள்ளடங்கிய பெறுபேற்றுப் படிவத்தினை பணிப்பாளர் நாயகம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொடுக்கப்படும்.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இந்த அறிவித்தலின் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில பிரசுரிப்புக்களில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களே செல்லுபடியானதாகும்.

டி. சி. ஏ. குணவர்தன,
தொகைமதிப்பு, புள்ளிவிபர பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்,
இல. 109, 4, 5 ஆம் மாடி,
"ரொட்டுண்டா ரவர்",
காலி வீதி,
கொழும்பு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறமை தடைகாண் பரீட்சை - 2012(2014)**

First Efficiency Bar Examination for Statisticians in Department of Census and Statistics - 2012(2014)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை பெட்டியில் எழுதவும்)

1. முதல் எழுத்துக்களை இறுதியில் இட்டு விண்ணப்பதாரியின் முதல் எழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதாரணம் : SUNIL, J.M.U :----.

   1.1 முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதாரணம் : SUNIL, J.M.U :----.
   1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. அலுவலகத்தின் பெயரும் முகவரியும் :
   2.1 அலுவலகத்தின் பெயர் :----.
   2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----. (இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3. 3.1 ஆண்/பெண் பிரிவு :-

   3.1 ஆண்-0
   பெண்-1
   (உரிய இலக்கத்தைப் பெட்டியில் இடவும்)

   3.2 பிறந்த திகதி :

   வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

   3.3 தேசிய அடையாள அட்டை இல. :
   [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

4. தற்போது வகிக்கும் பதவி :
   (நியமனக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.)

   4.1 நியமனக் கடித இலக்கம் :----.
   4.2 நியமனத் திகதி :----.

5. நீங்கள் தோற்றவுள்ள தடைகாண் பரீட்சைக்குரிய பாடம்/பாடங்கள் : (வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது அதிகாரத்தைப் பார்க்க.)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

6. நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? :----.
   6.1 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.
   6.2 பற்றுச்சீட்டு இல. :----.
   6.3 திகதி :----.

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் உறுதி மொழிகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

> பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)
> (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ................................................ எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

***திணைக்களத் தலைவரின் உறுதியுரை :***

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரி பார்க்கப்பட்டதென்றும்,
(2) நியமனக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட்டுள்ளதென்றும்,
(3) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

4-354

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.